சொரணாதொட்ட பிரதேச சபை - 2022

------------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சொரணாதொட்ட பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாடுகள் தொடர்பான கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் சொரணாதொட்ட பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது பிரதேச அபிவிருத்தி உதவி செயற்திட்டத்தில் (LDSP) பணத்தை பெற்றுக்கொள்ளும் போது மூலதன உதவி கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்ததுடன், நிதியத்தில் இருந்து சேமிக்கப்பட்ட தொகை செயற்திட்டத்தை அமுல்படுத்தும் வங்கி கணக்கில் செலவு வைக்கும் போது நானாவித வைப்புக் கணக்கு ரூபா 5,396,605 வரவு வைக்கப்பட்டிருந்தது. | பணத்தை பெறும்போது மூலதன உதவியின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன், சேமிப்பு பணம் வைப்பில் குறைத்தலாக வரவு வைக்கப்பட்டுள்ளது. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வேலை நிறுத்தி வைத்தல் பணத்திற்காக கிடைத்த ரூபா 545,259 தொகை நிதி நிலைமை கூற்றில் கடன்பட்டோர் மற்றும் வேலை கடன்கொடுத்தோர் ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரிசெய்யப்படும். | - மேற்படி - |
| (இ) | முன்னைய இரண்டு ஆண்டுகளுக்குரியதாக மீளாய்வாண்டின் போது கிடைத்த சம்பள மீளளிப்பு ரூபா 329,624 | எதிர்காலத்தில் இவ்வாறான வழுக்கள் ஏற்படாமல் இருப்பதற்கு நடவடிக்கை | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | மீளாய்வாண்டின் இறுதியில் வருமானமாக காண்பிக்கப்பட்டிருந்தது. | எடுக்கப்படும். | |
| (ஈ) | மீளாய்வாண்டின் போது மீளளிப்பு செய்யப்பட்ட பதிற்கடமை படி ரூபா 60,300 கடன்பட்டோர் மீதியில் காண்பிக்கப்பட்டிருந்தது. | மீளாய்வாண்டின் போது மீளளிப்பு செய்யப்பட்ட பதிற்கடமை படி ரூபா 60,300 கடன்பட்டோர் மீதியில் காண்பிக்கப்பட்டமையால் நடைமுறைச் சொத்துக்கள் அப்பெறுமானத்தால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - |
| (உ) | களஞ்சியத்தில் காணப்பட்ட ரூபா 735,954 மின்சார மற்றும் நீர் மற்றும் உபயோக பொருட்களின் இறுதி இருப்பு பெறுமதி பொதுக் களஞ்சிய இருப்பில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டின் போது கணக்குகளில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |
| (ஊ) | மீளாய்வாண்டின் முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 4,454,888 ஆக இருந்த போதிலும், அது ரூபா 4,187,822 ஆக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (எ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 உள்ளவாறு நிலுவையான முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 2,011,992 ஆக இருந்த போதிலும், அது ரூபா 1,022,431 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஏ) | மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 52,000 ஆன கழிவுப் பொருள் அகற்றுகின்ற வண்டி ரூபா 520,000 ஆக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு இரண்டு கணக்கு விடயங்களுக்குரிய நிதி நிலைமை கூற்றின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத் தொகைக்கும் பட்டோலைகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத் தொகைக்கும் இடையே ரூபா 1,622,378 வேறுபாடு காணப்பட்டது. | எதிர்வரும் ஆண்டின் போது இறுதி கணக்குகளில் சரிசெய்யப்படும். | ஒரே சமமான கணக்கு மீதிகள் இணக்கம் செய்யப்படல் வேண்டும். |

### 1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 6,105,101 பெறுமதியான இயந்திரங்கள், உபகரணங்கள் மற்றும் தளபாட பொருத்திகளின் மீதியை உறுதிப்படுத்துவதற்கான விரிவான பட்டோலை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய பெறுமதியை புத்தகங்களுக்கு எடுக்கும் போது தவறவிடப்பட்டிருந்ததுடன். முகாமைத்துவ குழுவின் அங்கீகாரத்தின் கீழ் எதிர்காலத்தில் சரிசெய்யப்படும். | நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துகின்ற எழுத்து மூல சான்றுகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

## 1.7 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாக) விதிக் கோவை விதி 204 | பொருள் மெய்மெய்யாய்வில் இனங்காணப்பட்டிருந்த பெறுமதி குறிப்பிடப்படாத 57 விடயங்களுக்குரிய 152 பொருள் அலகுகள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பொருட்களில் அநோகமான அளவு கண்டறியப்பட்டுள்ளது. மேலும், பற்றாக்குறையான பொருட்களுக்காக பரிந்துரைகள் அமுல்படுத்தப்படும். | பொருள் மெய்மெய்யாய்வு அறிக்கைகளில் இனங்காணப்பட்ட பற்றாக்குறைகள் தொடர்பாக பொருத்தமான பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் வருமானத்தை விஞ்சிய மீண்டெழும் செலவினம் ரூபா 5,637,185 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய மீண்டெழும் செலவினம் ரூபா 2,935,636 ஆகும்.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | ஆதன வரி | 102,724 | 97,906 | 56,314 | 41,591 | 101,724 | 98,498 | 68,639 | 29,842 |
| (ii) | வாடகை | 754,200 | 725,520 | 507,988 | 217,533 | 592,100 | 734,036 | 267,516 | 466,520 |
| (iii) | ஏனைய வருமானம் | 3,851,000 | 2,273,740 | 1,725,835 | 547,905 | 2,999,260 | 2,580,133 | 1,602,385 | 977,748 |
| | மொத்தம் | 4,707,924 | 3,097,166 | 2,290,137 | 807,029 | 3,693,084 | 3,412,667 | 1,938,540 | 1,474,110 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) **ஆதன வரி மற்றும் கடை வாடகை**<br>02 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் கொண்டுவரப்படுகின்ற நிலுவை ஆதன வரியும், வரியும் ரூபா 121,037 மற்றும் நிலுவை கடை வாடகை ரூபா 204,706 என்பன மீளாய்வாண்டின் இறுதியின் போதும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை ஆதன வரி மற்றும் கடை வாடகை கட்டணங்கள் விரைவாக அறவிடப்படல் வேண்டும். |
| (ஆ) **நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**<br>மாகாண சபையின் பிரதம செயலாளரிடம் இருந்தும் ஏனைய அதிகார தரப்பினரிடம் இருந்தும் மீளாய்வாண்டில் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப் பணம் ரூபா 222,615 மற்றும் முத்திரைக் கட்டணம் 793,026 என்பன பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | தற்போது நீதிமன்ற தண்டப் பணத்தில் 29,100 தொகையும் முத்திரைக் கட்டணத்தில் ரூபா 229,405 தொகையும் அறவிடப்பட்டுள்ளது. மிகுதி பணத்திற்காக கோரிக்கை விடப்பட்டுள்ளது. | நிலுவை நீதிமன்ற தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்களை பெற்றுக்கொள்ளல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுதல்

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1980 இன் 47 ஆம் இலக்க சுற்றாடல் சட்டத்தின் 23(ஆ) பிரிவின் படி விநியோகிக்கப்பட்ட கழிவுப் பொருள் எரித்தல்/ அகற்றுவதற்காக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெறப்பட்டிருக்கவில்லை. | கழிவுப் பொருள் அகற்றுகின்ற இடத்தில் கூட்டுப்பசளை தளமொன்றை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. அதன் பின்னர் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரம் பெறப்படும். | சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரத்தை பெற்று முறையாக கழிவுப் பொருட்களை அகற்றுதல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் வருடாந்த பாதீட்டில் அங்கீகரிக்கப்பட்ட பிரதேசங்களின் வீதிகள், பொதுக் கிணறுகள், வாராந்த சந்தை, பல்நோக்கு கட்டிடம் போன்ற 176 பல்வேறு செயற்திட்ட முன்மொழிவுகளில் இருந்து எந்தவொரு பணிகளும் நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை. | எதிர்பார்த்த பிரகாரம் வருமானங்களை சேகரிப்பதற்கு முடியாதிருந்தமையால் அந்த பணிகளை நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது. | பொது மக்களுக்கு பொது வசதிகள் வழங்கி நிறைவேற்றப்படல் வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அடியிதழ் புத்தகங்கள் விநியோகித்தல், மீள கையேற்றல் மற்றும் பணத்தை கையேற்றல் போன்ற நடவடிக்கைளில் மேற்பார்வை நிலைமையில் காணப்படுகின்ற நலிவின் காரணமாக 03 அடியிதழ் புத்தகங்களில் இருந்து சபைக்கு கிடைக்க வேண்டிய ரூபா 29,175 இழக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் இவ்வாறான நலிவுகள் ஏற்படாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நட்டத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| உள்ளூராட்சி உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தின் மூலம் ஆசிய அபிவிருத்தி வங்கி நிதி உதவியின் கீழ் உள்நாட்டு கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்தில் இருந்து இரண்டு மாடிகளை உடைய பிரதேச சபை பல்நோக்கு கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக 2010 ஆம் ஆண்டின் போது 09 சதவீத வருடாந்த வட்டி விகிதத்தின் கீழ் ரூபா 8,834,609 கடன் பெறப்பட்டிருந்தது. கடனை பெற்றுக் கொள்வதற்குரிய நிபந்தனையின் படி கடனை மீள செலுத்துவதற்கு 12 வருட காலம் வழங்கப்பட்ட போதிலும், 2022 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் மொத்த கடன் பணத்தில் மீதி ரூபா 11,320,648 ஆகும். அதன் பிரகாரம் கடன் தவணைப் பணம் மற்றும் வட்டி உரிய காலத்தில் செலுத்தி முடியுறுத்துவதற்கு சபை தவறியிருந்தது. | உரிய கடன் தவணைப் பணத்தை செலுத்துவதற்காக போதியளவான வருமானம் சபைக்கு கிடைக்காதிருந்ததுடன், எதிர்காலத்தில் வருமானத்தை அதிகரித்து உரிய தவணைப் பணத்தை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கடன் தவணைப் பணம் மற்றும் வட்டி குறித்துரைத்த பிரகாரம் செலுத்துதல் வேண்டும். |